# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2018 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க,*
## பொருளாதாரச் சேவை விதிப்பனவு
## (திருத்தச்) சட்டம்

---

*(2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2018, ஒற்றோபர் மாதம் 05 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2018 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க,**
**பொருளாதாரச் சேவை விதிப்பனவு**
**(திருத்தச்) சட்டம்**

[*2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ. - ஓ. 9/2018*

***2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

***1.*** *இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.* *சுருக்கப் பெயர்.*

***2.*** *(இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-* *2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

*(1) அவ்வுட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -*

*(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "பாகம் தொடர்பிலும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பாகம் தொடர்பிலும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;*

*(ஆ) அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) வில் -*

*(i) உட்பந்தி (ii) இல், "ஒவ்வொன்று தொடர்பிலும்; அல்லது ", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொன்று தொடர்பிலும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்*

(ii) அதன் (iii) ஆம் உட்பந்தியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(iii) 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னதாக, மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்பு பொருள் ஒவ்வொன்று தொடர்பிலும்; அல்லது";

(இ) அதன் உட்பந்தி (iii) இனை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியினை சேர்ப்பதன் மூலமும் :-

"(iv) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைக்கு உட்பட்டதாகவிராத மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும்; அத்துடன்"; அத்துடன்

(ஈ) அதன் பந்தி (ஆ) வினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(இ) இச்சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதன் பின்னர், உற்பத்தித் தீர்வைக்கு உட்படும் மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின்

அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத் தின்கீழ் விதிக்கப்பட்ட உற்பத்தித் தீர்வைத் தொகை மீதும்;".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகம் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) பந்தி (அ) வில் "கருப்படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கருதப்படுதல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (ஆ) வில் "கருதப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கருதப் படுதல் வேண்டும்; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(இ) பந்தி (ஆ) என்பதனை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(இ) இலங்கை மத்திய வங்கியின் விடயத்தில், விலை மீள்மதிப்பு மற்றும் வெளிநாட்டுச் செலவாணி மீள்மதிப்பு என்பவற்றிலிருந்து தேறல் செய்யப் படாத பெறுகை இலங்கை மத்திய வங்கியின் மொத்த விற்பனையின் பாகமாக அமையாது எனக் கருதப் படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணையைத் திருத்துதல்.*

**3.** (1) முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வட்டவணையின் 1 ஆம் விடயத்தில், "சில்லறை விற்பனை செய்யும் ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை செய்வதிலிலிருந்தான ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வட்டவணையின் 2 ஆம் விடயத்தில், "சில்லறை விற்பனையிலிருந்து ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனையிலிருந்து ஆளின் அல்லது பங்காண்மையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) இப்பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*